# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 174/2025** |
| Prosecution witness | : | P.W. 4 |
| List of witness | : | L.W.5 |
| Name | : | பிரேமா |
| Father's /Husband Name | : | ஜெயராமன் |
| Village | : | மேல ஆதிச்சமங்களம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 55 |
| Occupation | : | வீட்டுகுடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 07th day of April 2026. Both accused absent. Petition U/s 355 BNSS filed . Allowed

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். அ.சா.1 எனது மகள் ஆவாள். அ.சா. 2 மற்றும் 3 ஐ எனக்கு தெரியும். ஆஜரில்லாத எதிரிகள் விஜயா சங்கர் மற்றும் விஜயா ஆகியவர்களை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** சுமார் 1 வருடம் முன்பாக தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் நான் எனது வீட்டில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த குடவாசல் போலீசார் எதிரிகள் அ.சா.1 ஐ பிரச்சனை செய்தது தொடர்பாக போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள். அப்போது நானும் பாலு என்பவரும் உடன் இருந்தோம். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார்கள். அதன் பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

பார்வை மகசரில் என்ன எழுதியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. போலீசார் என்னிடம் எதுவும் படித்து காட்டவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சம்பவ இடத்தில் வைத்து நான் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை

என்றாலும் அ.சா.1 எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.07 11:39:25 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.